# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7355/E/2018**

திரு P.ராமராஜ் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
இலால்குடி, திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
இலால்குடி, திருச்சி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 02.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 24.08.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 03.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு P.ராமராஜ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு ப.ரவி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இலால்குடி, திருச்சி மாவட்டம் மற்றும் திரு முருகன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், இலால்குடி, திருச்சி மாவட்டம் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் 02.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள்.31.08.2017 திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மனு எண்.80,81, வருவாய் கோட்டாட்சியர் / துணை ஆட்சியர் அலுவலகம், மனு நாள்.18.05.2018, வட்டாட்சியர் அலுவலகம், இலால்குடி மனு நாள்.18.05.2018, இலால்குடி வட்டாட்சியர் அலுவலகம், நில அளவைப் பிரிவு மனு நாள்.01.08.2017 கருவூல பதிவு எண்.5549, 5550, மனு நாள்.07.012.2017, விண்ணப்ப எண்.(2017/0105/15/023078), 89, நெய்குளம் கிராம நத்தம் சர்வே எண்.654/24 ன் “அ” பதிவேடு நகல் மற்றும் மேற்படி மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் (வருவாய் துறை), திருச்சிராப்பள்ளி மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 11.07.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், இலால்குடி மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், இலால்குடி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளருக்கு 06.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 24.08.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 29.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 03.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 18.07.2018, 15.10.2018 மற்றும் 24.09.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலைப் பரிசீலனை செய்கையில் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. இதுகுறித்து இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொது அதிகார அமைப்பினரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல்களை 7 தினங்களில் வழங்குவதாக எழுத்துமூலமாகத் தெரிவித்தார்கள். இதனை ஆணையம் பதிவு செய்து விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது.

**மேல்முறையீட்டாளர் 02.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 7355/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
இலால்குடி, திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
இலால்குடி, திருச்சி மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு P.ராமராஜ்,
த/பெ. பெருமாள்,
வடக்குத்தெரு, சிவன்கோவில் தெரு,
நெய்க்குளம், நெடுங்கூர் அஞ்சல்,
இலால்குடி வட்டம்,
திருச்சி மாவட்டம் - 621 105.\

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*